RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 214 | ஆகஸ்டு.6 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## விநாயகர் சதுர்த்தி: ராமநாதபுரத்தில் 600க்கும் அதிகமான இடங்களில் சிலை வைத்து வழிபட ஏற்பாடு

ராமேசுவரம்: ஆக.6-

ராமநாதபுரம் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 600க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலைகள் வைத்து சிறப்பு வழிபாடுகள் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி அன்று பொதுமக்கள், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, பாஜக உள்ளிட்ட பல்வேறு இந்து அமைப்புகள் சார்பில் விநாயகர் சிலைகள் பொது இடங்களில் வைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். நடப்பாண்டு விநாயகர் சதுர்த்தி விழா ஆகஸ்ட் 27ம் தேதி கொண்டாடப்படுகிறது.

விநாயகர் சதுர்த்தி தினத்தையொட்டி ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன், உச்சிப்புளி, பரமக்குடி, கமுதி, திருவாடானை, மண்டபம், சாயல் குடி, கடலாடி, திருப்பாலைக்குடி, ராமநாதபுரம், திருப்புல்லானி, தேவிப்பட்டினம், ஏர்வாடி, தொண்டி, ஆர்.எஸ். மங்களம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் ஆகஸ்ட் 28 மற்றும் ஆகஸ்ட் 29 ஆகிய நாட்களில் ஊர்வலமும், சிறப்பு வழிபாடுகள் செய்வதற்கு பல்வேறு இந்து அமைப்புகள் சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தாண்டு இந்து முன்னனி இயக்கத்தின் சார்பாக "நமது சாமி, நமது கோயில், நாமே பாதுகாப்போம்" என்ற பிரச்சாரத்தை பக்தர்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், இந்துக்களின் ஒற்றுமைத் திருவிழாவாகவும், இந்துக்களின் எழுச்சி விழாவாகவும் நடத்த முடிவு செய்துள்ளோம்." என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திண்டுக்கல் பிஆர்ஓ அலுவலகத்தில் திருப்பம் ஏற்படுமா? என காத்திருக்கும் செய்தியாளர்கள்

திண்டுக்கல், ஆக.6-

திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகத்தில் பணியாற்றி வரும் ஏபிஆர்ஓ செய்தியாளர்கள் பெயரைச் சொல்லி பல இடங்களில் பண மோசடி செய்வது குறிப்பிட்டவர் மேலும் செய்தி போடச் சொல்லி பின்பு அதை கட்டப்பஞ் சாயத்து வைத்து பணம் பரிமாற்றம் செய்வது போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டு வருவதாக பல நாளிதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.







அச்செய்திகள் அது மட்டும் அல்ல செய்தியாளர்கள் பெயரைச் சொல்லி அமைச்சர் பெருமகனாரிடம் பணத்தை பெற்றுக் கொண்டு தானே விழுங்கி கொள்வது குறிப்பிட்ட நாளிதழ்களில் மட்டும் பணத்தைப் பெற்றுக் கொண்டு விதிமுறைகளை மீறி விளம்பரம் அளித்தது போன்ற பல செயல்களை செய்து வருகிறார் இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே செய்தியாளர்களும் கோரிக்கை அது மட்டுமல்லாமல் திண்டுக்கல் பிஆர்ஓ பேச்சை கேட்பதே இல்லை என்ற பேச்சும் அடிபட்டு வருகிறது எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டாலும் என்னை இந்த மாவட்டத்தில் இருந்து மாற்ற இயலாது என்ற சூழலைத்து வருவதாகவும் செய்தியாளர்கள் கூறுகின்றனர் அது மட்டும் இல்லாத செய்தியாளர்களுக்கு முறையான மரியாதை அளிப்பதில்லை மலர் கண்காட்சியில் ஏராளமான பண பரிவர்த்தனை செய்ததாகவும் கூறப்படுகிறது இது குறித்து வருமானவரித்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் நேரடி ஆய்வு செய்து அவர் சொத்து மதிப்புகளை ஆய்வு செய்தால் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவரும் என்பது ஐயம் இல்லை என்றும் கூறுகிறார்கள் செய்து மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் பெருமகனார் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் உடனடி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கும் செய்தியாளர்கள்.

## கருணாநிதி நினைவு நாள்: ஆக.7ம் தேதி திமுக அமைதிப் பேரணி

சென்னை: ஆக.6-

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7வது ஆண்டு நினைவு தினமான ஆக.7ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுகவினர் அமைதிப் பேரணியாக சென்று, நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

7ம் தேதி காலை 7 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணை பொது செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் அமைதிப் பேரணி நடக்கவுள்ளது.

இதன்படி அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலை அருகில் இருந்து புறப்படுகிறது. பின்னர் வாலாஜா சாலை வழியாகச் சென்று காமராஜர் சாலையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

## பிரதமர் மோடியுடன் பிலிப்பைன்ஸ் அதிபர் சந்திப்பு இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த உறுதி

புதுடெல்லி: ஆக.6-

பிலிப்பைன்ஸ் அதிபர் ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர், பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் இன்று சந்தித்துப் பேசினார். அப்போது, இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

5 நாள் பயணமாக நேற்று புதுடெல்லி வந்த ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியருக்கு, இன்று காலை குடியரசு தலைவர் மாளிகையில் அரசுமுறை வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து, ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில், இரு தரப்பு உறவை மூலோபாய கூட்டாண்மையாக உயர்த்த முடிவு எடுக்கப்பட்டது.



இந்தியா பிலிப்பைன்ஸ் இடையே தூதரக உறவு ஏற்பட்டதன் 75ம் ஆண்டை நினைவுகூரும் வகையில், சிறப்பு தபால் தலையை தலைவர்கள் இருவரும் வெளியிட்டனர். இதையடுத்து, தலைவர்கள் இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியா பிலிப்பைன்ஸ் உறவை மூலோபாய கூட்டாண்மை நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முடிவு உரிய பலனை அளிப்பதற்கான விரிவான செயல் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இந்திய பெருங்கடல் முதல் பசுபிக் வரை நாம் பகிரப்பட்ட மதிப்புகளால் ஒன்றுபட்டுள்ளோம். நமது இரு நாடுகளுக்கு இடையே இருப்பது கடந்தகால நட்பு மட்டுமல்ல, எதிர்காலத்துக்கான வாக்குறுதியும்கூட.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, செழிப்பு மற்றும் விதிகள் சார்ந்த ஒழுங்குமுறை அமலில் இருப்பதை உறுதிப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். சர்வதேச சட்டங்களின்படி கடல்வழி சுதந்திர வர்த்தகத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்ததற்காகவும், பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவுடன் துணை நின்றதற்காகவும் பிலிப்பைன்ஸ் அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்தார்.

## கவின் கொலை வழக்கு: 8 வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு

மதுரை: ஆக.6-

கவின் கொலை வழக்கின் விசாரணை அறிக்கையை 8 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சிபிசிஐடிக்கு மதுரை உயர் நீதிமன்ற கிளை உத்தரவிட்டுள்ளது.





தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுக மங்கலம் பகுதியைச் சேர்ந்த மென்பொருள் பொறியாளர் கவின் செல்வ கணேஷ். இவர் பட்டியலின சமூகத்தை சேர்ந்த இளைஞர். இவர் கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக கவின் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரர் சுர்ஜித் என்பவரை பாளையங்கோட்டை போலீஸார் கைது செய்துள்ளனர். மேலும், அவர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், சுர்ஜித்தின் பெற்றோர்களான தமிழ்நாடு சிறப்பு காவல்படை சார்பு ஆய்வாளர்களான சரவணன் மற்றும் கிருஷ்ண குமாரி ஆகியோர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதனால் இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் காவலர் சரவணன் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் கவின் கொலை வழக்கு தொடர்பாக தூத்துக்குடியைச் சேர்ந்த காந்திமதி நாதன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். அதில், கவின் கொலை வழக்கு விசாரணை நெல்லை மாவட்ட நீதிபதி கண்காணிப்பில் நடைபெறவும், கவின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், காதல் விவகாரத்தில் கொலைகள் நடைபெறுவதை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்றவும் உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஜ்மல்கான் வாதிடுகையில், கவின் கொலை வழக்கை சிபிசிஐடி போலீஸார் விசாரித்து வருகின்றனர். கவின் குடும்பத்துக்கு ரூ.6 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ரூ.6 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். தந்தை, மகன் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை சரியான திசையில் செல்கிறது. இதில் தலையிட தேவையில்லை. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறினார்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஐ.பினேகாஸ், என்.அர்ஜூன்குமார் வாதிடுகையில், தமிழகத்தில் 2017 முதல் 2024 வரை 65 காதல் விவகாரக் கொலைகள் நடைபெற்றுள்ளது. இதுபோன்ற கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்ற உத்தரவிட வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

இதையடுத்து வாதங்களை கேட்ட நீதிபதிகள், கவின் கொலை வழக்கின் விசாரணை அறிக்கையை சிபிசிஐடி போலீஸார் 8 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை பாரபட்சம் இல்லாமலும், ஒருதலை பட்சமாக இல்லாமலும் நடைபெற வேண்டும்.

கவின் கொலையில் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் காசிப் பாண்டியன் தலையீடு இருப்பதாக கவின் தந்தை புகார் அளித்திருப்பதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்புகார் அடிப்படையில் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் மற்றும் கொலையில் தொடர்புடையவர்களின் செல்போன் உரையாடல்கள் குறித்து விசாரிக்க வேண்டும்.

இந்த வழக்கில் 3வது எதிரி இன்னும் கைது செய்யப்படவில்லை. இதையும் போலீஸார் கவனத்தில் கொள்ள வேண்டும். விசாரணை அறிக்கையில் குறைபாடு இருந்தால் மனுதாரர் சார்பில் இறுதி விசாரணையின் போது நீதிமன்றத்தில் முறையிடலாம். காதல் விவகாரக் கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் கொண்டு வருவது தொடர்பாக இறுதி விசாரணையின் போது முடிவெடுக்கப்படும்" என்று நீதிபதிகள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

## தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா தலைமையில் திருத்தணியில் நடைபயணம்

திருவள்ளூர்: ஆக.6-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, முதற்கட்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, நேற்று திருத்தணியில் சுமார் 2 கிமீ. தூரம் நடைபயணம் மேற்கொண்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, 'உள்ளம் தேடி' இல்லம் நாடி'(வாக்குச் சாவடி நிர்வாகிகளுடனான சந்திப்பு), 'கேப்டனின் ரத யாத்திரை''மக்களை தேடி மக்கள் தலைவர்' (மக்களுடன் சந்திப்பு) ஆகிய பெயர்களை கொண்ட தமிழகம் முழுவதுமான முதற்கட்ட சுற்றுப்பயணத்தை தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா நேற்று முன்தினம் கும்மிடிப்பூண்டி பேரவை தொகுதிக்கு உட்பட்ட ஆரம்பாக்கத்தில் தொடங்கினார்.



இந்த சுற்றுப்பயணத்தின் 2வது நாளான நேற்று காலை ஆவடி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பட்டாபிராமில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வாக்குச் சாவடி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதிஷ், உயர்மட்டக் குழு உறுப்பினர் நல்லதம்பி, ஆவடி மாநகர் மாவட்ட செயலாளர் நா.மு.சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து, மாலை பிரேமலதா திருத்தணியில் நடைபயணம் மேற்கொண்டார். திருத்தணி அரக்கோணம் சாலையில், புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கிய இந்த நடைபயணம், மபொசி சாலை வழியாக சுமார் 2 கிமீ தூரத்துக்கு நடைபெற்றது.

இதில், திருத்தணி முருகன் கோயில் மலை பாதை சந்திப்பு அருகே பிரேமலதாவுக்கு, தேமுதிக நிர்வாகிகள், கிரேன் மூலம் மாலை அணிவித்ததோடு, 5 அடி உயரம் கொண்ட வெள்ளிவேல் வழங்கினர். அந்த வேலை கையில் ஏந்தியவாறும், மக்களை பார்த்து கையசைத்தவாறும் பிரேமலதா நடைபயணம் மேற்கொண்டார்.



# குடியாத்தம் பிச்சனூர் ஸ்ரீ காளியம்மன் தேர் திருவிழா : புதிய நீதிக் கட்சி சார்பில் தொடர்ச்சியாக மாபெரும் அன்னதானம் : பொதுமக்கள் பாராட்டு!

வேலூர், ஆக.06

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பிச்சனூர் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் தேர் திருவிழா முன்னிட்டு குடியாத்தம் நகர புதிய நீதி கட்சி 4, 5 வது வார்டு சார்பாக தொடர்ச்சியாக மாபெரும் அன்னதான விழா, நகரப் பொருளாளர் எஸ்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் சசிகுமார் வரவேற்புரையாற்றுகையில், கன்னியப்பன் துவக்கவுரை நிகழ்த்தி, மண்டல செயலாளர் ப.சரவணன் மாவட்ட செயலாளர் பிரம்மாஸ் செந்தில் ஆகியோருடன், நகர செயலாளரும், கைத்தறி காவலன் எஸ்.ரமேஷ் ஆலோசனைக்கிணங்க,அன்னதானத்தை துவக்கி வைத்தனர். மேலும், புதிய நீதி கட்சியின் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உமா மகேஸ்வரி, சகாதேவன், வேலு, வெங்கடேசன், சுந்தரராஜன், வசந்தகுமார், செல்வம், குணசேகர், திருநாவுக்கரசு, பேட்டரி சுந்தரராஜன், மோகன், வினோத்குமார், சரத்குமார், சுதாகர், கூஷி.மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். புதிய நீதிக் கட்சியின், நகர செயலாளரும், கைத்தறி காவலன் அன்னதான பிரபுவுமான எஸ்.ரமேஷ் தலைமையிலான தொடர் அன்னதான விழாவை பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.







# தாம்பரம் மாநகர திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ் தலைமையில் நடைபெற்றது

தாம்பரம், ஆக.6

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில் தாம்பரம் மாநகர துணை செயலாளர்கள் மேயர் க.வசந்தகுமாரி கமலக்கண்ணன், இரா.நரேஷ்கண்ணா, பொ.சதாசிவம், தாம்பரம் மாநகர பொருளாளர் வ.விஜயரங்கன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி. இளம்சுருதி, மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், இரா.சுரேஷ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# நெய்க்காரபட்டி திமுக பேரூர் செயலாளரின் அடாவடி



நெய்க்காரபட்டி, ஆக.6-

நெய்க்காரபட்டி திமுக பேரூர் செயலாளராக இருப்பவர் அபுதாஹிர். அதே ஊரில் மொபைல் கடை வைத்திருப்பவர் அஜ்மத் உசேன். இருவரும் நண்பர்களாக இருந்த நிலையில் பண பிரச்சனை தொடர்பாக கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இது குறித்த வீடியோ பதிவை அஜ்மத் உசேன் வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார். இதனால் அஜ்மத் உசேனின் வீட்டின் மீது இரவு நேரத்தில் அபுதாகிர் ஆதரவாளர்கள் கற்களை வீசி அச்சுறுத்தலை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு குடும்ப பிரச்சினை காரணமாக பழனி நகர் காவல் நிலையம் முன்பு அஜ்மத் உசேன், குழந்தைகள் சிறுவயதாக இருந்த பொழுது தீக்குளிக்க முயன்றதை தற்போது அபுதாகிர் ஆதரவாளர்கள் வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர்

இதனால் குழந்தைகளின் நண்பர்கள் கேலி செய்வதாலும், அபுதாஹிர் தரப்பிலிருந்து குழந்தைகளுக்கு ஆபத்து நேர்ந்து விடலாம் என்பதாலும், குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே வராமலும், பள்ளிக்குச் செல்லாமலும் உள்ளனர்

இது குறித்து பழனி தாலுகா காவல் நிலையத்தில் அஜ்மத் உசேன் புகார் அளித்துள்ளார். குழந்தைகளின் படங்கள் பகிரப்படுவதன் காரணத்தால் அஜ்மத் உசேன் தற்போது வீட்டில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. திமுக பேரூர் செயலாளர் அபுதாஹிர் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை கட்சிப் பிரச்சினையாக மாற்றி குடும்பத்தை மன உளைச்சலுக்கு ஆளாக்கி உள்ளதாக கூறும் அஜ்மத் உசேன் தங்களுக்கு உரிய நீதி வழங்க காவல்துறையினர் உதவ வேண்டும்

மேலும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்





# அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்புக் குழுவின் சார்பாக விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன

காரைக்குடி ஆக.06

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக அரசின் ஆணைக்கிணங்க போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வின் ஒரு பகுதியாக

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்புக் குழுவின் சார்பாக பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து துவக்கி வைத்தார். மாணவ மாணவியர் பேருந்து நிலையத்தில் காத்திருந்த பயணிகள் மற்றும் அப்பகுதியில் இருந்த பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கி போதைப் பொருள் ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம், முனைவர் வேலாயுதராஜா, முனைவர் ராமசாமி, முனைவர் பாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் போதைப் பொருள் ஒழிப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# தேவகோட்டை அருணகிரிபட்டினம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் 118 ம் ஆண்டு ஆடி உற்சவ விழாவை முன்னிட்டு பூச்சொரிதல் விழா

தேவகோட்டை. ஆக.06

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீரெங்கபுரம் அருணகிரிபட்டினத்தில் இந்து அறநிலைத்துறை சார்ந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி உற்சவ விழா மிகச் சிறப்பாக நடைபெறும். அதே போல இந்த ஆண்டிற்கான விழாவிற்கு கடந்த மாதம் 29 தேதி அம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. காப்பு கட்டிய ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் சத்திரத்தார் ஊரணியில் இருந்து சக்தி கரகம் எடுத்துக் முக்கிய வீதிகளில் வலம் வந்து கோவில் வந்தடையும்.

வெள்ளி அங்கி திரு அலங்காரம், தேவி கருமாரியம்மன், ராஜராஜேஸ்வரி, மகாலட்சுமி, இந்திராணி, காமாட்சி



போன்ற அலங்காரத்தில் அம்மன் காட்சி தருகிறார்.

நேற்று இரவு பூச்சொரிதல் விழா சிலம்பணி விநாயகர் கோவில் இருந்து சுமார் 5000க்கும் மேற்பட்ட பூ தட்டுகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் எடுத்து தியாகிகள் சாலை, நகை கடை வீதி, கருதாவூரணி, கண்டதேவி ரோடு வழியாக வலம் வந்து கோவில் வந்தடைந்தது. அம்மனுக்கு மலர்களால் அபிஷேகம் நடைபெற்றது.

இன்று இரவு சக்தி கரகம் எடுத்தல், நாளை காலை புதன்கிழமை பால்குடம், பூக்குழி இறங்குதல் நடைபெறும்.

இவ்விழாவிற்கு இப் பகுதியில் உள்ள பொதுமக்கள் உலக நாடுகளில் வாழும் மக்கள் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறை துணை கண்காணிப்பாளர் கௌதம் தலைமையிலான காவல்துறையினர் கோவில் முன்பு தற்காலிக காவல் நிலையம் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# சிவகங்கையில் இன்று "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது காரைக்குடி மாநகராட்சி, மானாமதுரை நகராட்சி, திருப்புவனம், காளையார்கோவில், சிங்கம்புணரி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, ஆக.6-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 6ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 12, 13, 14 ஆகிய பகுதிகளுக்கென காரைக்குடி முத்து தங்க மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 6,14,15,16 ஆகிய பகுதிகளுக்கென பார்த்திபனூர் ரோட்டில் அமைந்துள்ள ஆர்.சி. சர்ச் மஹாலிலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட டி.ஆலங்குளம், கீழசொரிகுளம், மேலசொரிகுளம், முதுவன்திடல், பிரமனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென பிரமனூர் நடுநிலை பள்ளியிலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மறவமங்கலம், சிரமம், சேதாம்பல், உசிலங்குளம், வேளாரேந்தல் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மறவமங்கலம் லெட்சுமி மஹாலிலும், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சதுர்வேதமங்கலம், வையாபுரிபட்டி, செல்லியம்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சதுர்வேதமங்கலம் சமூதாயக்கூடத்திலும்,

இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முனைவென்றி, பிராமணகுறிச்சி, எஸ்.காரைக்குடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முனைவென்றி ஊராட்சியிலுள்ள அறிவொளிநகர் சமூதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

# புதிய டிஜிபியை தேர்வு செய்வதில் இழுபறி: தேர்வு பட்டியலை மத்திய அரசுக்கு அனுப்பாததால் தொடரும் குழப்பம்

சென்னை: ஆக.6-

தமிழக காவல் துறையின் தலைமை டிஜிபியான சங்கர் ஜிவால் ஆக. 31ம் தேதியுடன் பணி ஓய்வு பெறுகிறார். இதையடுத்து, புதிய டிஜிபி யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

சீனியாரிட்டி அடிப்படையில் 1990ல் தேர்வாகி தற்போது டிஜிபிக்களாக உள்ள தீயணைப்புத் துறை இயக்குநர் சீமா அகர்வால், 1992ல் தேர்வான ஆவின் விஜிலன்ஸ் டிஜிபி ராஜீவ்குமார், அதே ஆண்டில் தேர்வான காவல் உயர் பயிற்சியக டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் முறையே முதல் 3 இடங்களில் உள்ளனர். அடுத்தடுத்த இடங்களில் டிஜிபிக்களான அபய் குமார் சிங், வன்னியபெருமாள், மகேஷ்குமார் அகர்வால், வெங்கட்ராமன், வினித்தேவ் வான்கடே உள்ளனர்.

வழக்கமாக புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபி பணியிடம் காலியாக உள்ள 3 மாதங்களுக்கு முன்னரே தமிழக அரசு அடுத்த தகுதியான 8 பேரின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பிவைக்கும். அதில், எந்த குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகாத சீனியாரிட்டி மற்றும் தகுதியின் அடிப்படையில் முதல் 3 இடங்களில் உள்ளோரின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் தமிழக அரசுக்கு மீண்டும் அனுப்பி வைக்கும். அதில், ஒருவரை தேர்வு செய்து தமிழக அரசு புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபியாக நியமிக்கும். இதுதான் நடைமுறை.

இந்நிலையில், ஆக. 31ம் தேதியுடன் டிஜிபி சங்கர் ஜிவால் பணி ஓய்வு பெற உள்ள நிலையில், புதிய டிஜிபியை தேர்வு செய்வதற்கான 8 பேர் பட்டியலை தமிழக அரசு இதுவரை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பி வைக்கவில்லை என கூறப்படுகிறது. தற்போதைய டிஜிபிக்கு பணிநீட்டிப்பு வழங்கப்படலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால், அந்த நடைமுறை உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் இன்னும் 8 அல்லது 9 மாதங்களில் நடைபெற உள்ளது. எனவே புதிய டிஜிபி, தங்களுக்கு சாதகமானவராக இருக்க வேண்டும் என தமிழக அரசு விரும்புவதாகவும், அதனாலேயே புதிய டிஜிபி தொடர்பான பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பி வைக்காமல் காலம் தாழ்த்துவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இப்போது கூடுதல் டிஜிபிக்களாக உள்ள டேவிட்சன் தேவாசீர்வாதம், சந்தீப் மித்தல், பாலநாகதேவி உள்ளிட்டோருக்கு வரும் ஜனவரி மாதம் முதல் தேதியில் டிஜிபியாக பதவி உயர்வு வழங்கப்பட உள்ளது.

எனவே, இவர்களையும் சேர்த்து டிஜிபி பட்டியலில் உள்ள யாரையாவது ஒருவரை பொறுப்பு டிஜிபியாகவோ அல்லது சிறப்பு டிஜிபியாகவோ சில மாதங்கள் நியமிக்கலாம். அதன் பிறகு தேர்தல் நடைமுறை அமலுக்கு வந்த பின்னர் தேர்தல் ஆணையம் யாரையாவது ஒருவரை சட்டம் ஒழுங்கு டிஜிபியாக நியமிக்கும் வரை அமைதி காக்கலாம் என தமிழக அரசு நினைப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுஒருபுறம் இருக்க, டிஜிபி சங்கர் ஜிவால் ஓய்வுக்குபிறகு, பொறுப்பு டிஜிபி நியமிக்கவும் சங்கர் ஜிவாலின் பணிக்காலத்தை நீட்டிப்பு செய்யவும் இடைக்கால தடை விதித்தும் டிஜிபி பதவிக்கு தகுதியான ஐபிஎஸ் அதிகாரிகளின் பட்டியலை தமிழக அரசு உடனடியாக தயார் செய்ய உத்தரவிடவும் கோரியும் மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்துக்கு புதிய டிஜிபியா, பொறுப்பு டிஜிபியா அல்லது சிறப்பு டிஜிபியா என போலீஸார் குழப்ப நிலையில் உள்ளனர்.

# ஆங்கிலம் திறன் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் பயிற்சி மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

சென்னை ஆக.6

சென்னை ஒ.எம். ஆர்.சாலையில் உள்ள செயிண்ட் ஜோசப் தொழில்நுட்ப கல்லூரியில் சுய உதவிக்குழுக்களில் (SHGs) பெண்களை அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட மூன்று நாள் பட்டறை தொடங்கப்பட்டது. புதுமையான தொழில்நுட்பத்தைப் பரப்புதல் (DIT) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சிலால் ஆதரிக்கப்படும் இந்த முயற்சி, டிஜிட்டல் மார்க்கெட்டிங் திறன்களுடன் ஒருங்கிணைந்த நூல் வளையல்கள் மற்றும் ஜூம்கா தயாரிப்பில் திறன் பயிற்சியில் கவனம் செலுத்துகிறது. தொடக்க விழா செயிண்ட் ஜோசப் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் முதல்வர் டாக்டர் எஸ். அறிவழகன் விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றினார்.

பிராண்ட் ஃபாக்ஸ் குளோபல் இகாமர்ஸ் சொல்யூஷன்ஸ் மற்றும் "ஷி தி சக்தி" நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மரியா சுபி ராஜன், நிகழ்வில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, பெண்கள் மத்தியில் தொழில்முனைவோர் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்.



பயிலரங்கு சிறப்பம்சங்கள்:

* நாள் 1 (29 ஜூலை 2025): நூல் வளையல் மற்றும் ஜூம்கா தயாரிப்பது குறித்த தொடக்க விழா மற்றும் நடைமுறை அமர்வுகள்.
* நாள் 2 (30 ஜூலை 2025): சந்தைப்படுத்தல் அடிப்படைகள், சிறு வணிகங்களுக்கான பிராண்டிங், லிஃப்ட் பிட்ச் நுட்பங்கள் மற்றும் ஒரு தனித்துவமான விற்பனை முன்மொழிவை உருவாக்குதல் பற்றிய அமர்வுகள் நடைப்பெற்றது.

5):டிஜிட்டல் வணிக மாற்றம் மற்றும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வக அமர்வுகள் குறித்த பயிற்சி, ஒரு நிறைவு விழாவில் உச்சத்தை எட்டியது.

செயிண்ட் ஜோசப் கல்வி நிறுவனங்களின் தலைமை புரவலர்களாக டாக்டர் பி. பாபு மனோகரன் (தலைவர்), திரு. பி. சஷி சேகர் (மேலாண்மை இயக்குநர்) மற்றும் எஸ். ஜெஸ்ஸி பிரியா (நிர்வாக இயக்குநர்) ஆகியோர் அடங்குவர்.

இந்த நிகழ்வை தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் ஊக்குவித்து ஆதரித்தது, மேலும் டாக்டர் அட்லின் ஷீபா மற்றும் டாக்டர் சி. ஏ. சுபாசினி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



# திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கபட்டுள்ள மின் விளக்கு கோபுர திறப்பு விழா

தாம்பரம் ஆக.6

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் 4வது மண்டலம் 52வது வட்டத்தில் திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கபட்டுள்ள உயர் மின் கோபுர விளக்கை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி கமலக்கண்ணன், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறப்பினர் எல்.பெரியநாயகம், வட்டக் கழக செயலாளர் மு.விஜயன், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் பூதகுடி,வாகைகுளம் ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டார்.முகாமில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன் குமார் இ.ஆ.ப. ஊராட்சி உதவி இயக்குனர் அரவிந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பேராட்சி பிரேமா,பொற்செல்வி ஊராட்சி செயலாளர்கள் சுரேஷ் குமார்,ஈஸ்வரி மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் நாளை "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது காரைக்குடி மாநகராட்சி, தேவகோட்டை, எஸ்.புதூர், மானாமதுரை, கல்லல், சிவகங்கை ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, ஆக.6-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 7 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 9, 10, 11 ஆகிய பகுதிகளுக்கென கழனிவாசல் ஸ்ரீ முத்துகிருஷ்ணா மஹாலிலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தளக்காவயல் ஊராட்சி பகுதிக்கென தளக்காவயல் ஊராட்சியிலுள்ள வெளிமுதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெடுவயல், மேலவண்ணாரிருப்பு, மின்னமலைப்பட்டி, உறத்துப்பட்டி, மணலூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மணலூர் ஊராட்சி யிலுள்ள சமுதாயக்கூடத்திலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கட்டிக்குளம், குவளைவேலி, விளத்தூர், தஞ்சாக்கூர், சுள்ளங்குடி, மிளகனூர், அரசகுளம் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கட்டிக்குளம் ஊராட்சிலுள்ள சமுதாயக்கூடத்திலும்,

கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம், கள்ளிப்பட்டு, என்.மேலையூர், என்.கீழையூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கண்டரமாணிக்கம் ஊராட்சி யிலுள்ள ஸ்ரீ ஐஸ்வர்யா மஹாலிலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முடிகண்டம், இலுப்பக்குடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முடிகண்டம் சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



# பொழிச்சலூர் ஊராட்சி த.வெ.க சார்பில் கிரிக்கெட் போட்டிக்கு கோப்பை வழங்கப்பட்டது

பொழிச்சலூர் ஆக.6

செங்கல்பட்டு மாவட்டம் பொழிச்சலூரில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதி விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் ஆணைக்கிணங்க செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வீ.குமார் அவர்களின் அறிவுறுத்தின்படி 03/8/2025 அன்று பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் Under 20 கிரிக்கெட் விளையாட்டு போட்டி மிக சிறப்பாக நடைபெற்றது இந்த கிரிக்கெட் விளையாட்டு போட்டிக்கு பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை சுரடி ரவி அவர்களின் தலைமையில் பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை எஸ்.ஜான் அவர்களின் ஏற்பாட்டில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக பரிசு கோப்பைகள் வழங்கப்பட்டது முதல் பரிசு வெற்றி கோப்பை பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை த.வெ.க எஸ்.ஜான், இரண்டாம் பரிசு வெற்றி கோப்பை ஒன்றிய இளைஞரணி தலைமை த.வெ.க எஸ்.பார்த்திபன், மூன்றாம் பரிசு வெற்றி கோப்பை மாவட்ட இளைஞரணி தலைமை த.வெ.க பி.கவின் ஆகியோர் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது இதில் தமிழக வெற்றிக்காக நிர்வாகிகள் உட்பட கிரிக்கெட் வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# மகப்பேறு மருத்துவ மையமாக விளங்கும் பூதப்பாண்டி அரசு தாலுகா மருத்துவமனைக்கு சிறந்த நடைமுறைக்கான விருது

கன்னியாகுமரி, ஆக.6-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தனது செய்திக்குறிப்பில் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அரசு மருத்துவமனை, மகப்பேறு மருத்துவத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உகந்த முன்மாதிரி மையமாக திகழ்கிறது. வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டம் 2024-25இன் கீழ் ரூ.32.70 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் பிரசவ காலத்தில் மருத்துவமனையில் தங்குமிடம் தனிப்பட்ட இடமாகவும், பாதுகாப்பானதாகவும் அமைய ஒவ்வொரு படுக்கையும் தனித்தனி திரைப்பகிர்வுகளால் முழுமையாக திரையிடப்பட்டுள்ளது. இந்த வசதியானது பிரசவித்த தாய்மார்கள் தங்களது சுயமரியாதையை இழக்காமல் தங்களின் குழந்தைகளுக்கு பாலூட்ட ஏதுவாக உள்ளது.

பேறு காலத்தில் பெண்களுக்கு அவர்களது உறவினர்களின் ஆதரவு மற்றும் அரவணைப்பு மிகவும் இன்றியமையாததாகும். இம்முக்கிய தருணத்தில், பிரசவித்த பெண்களின் உறவினர்கள் அவர்களுடன் தங்கி அவர்களை கவனித்துக் கொள்ள இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கு அருகாமையிலேயே படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவர்களது உடைமைகளை பாதுகாக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், Double Surface Phototherapy LED முதலிய நவீன உபகரணங்கள் மூலம் பிறந்த குழந்தை தீவிர சிகிச்சை பிரிவு வலுப்படுத்தப்பட்டு 24ஓ7 மணி நேரமும் நிபுணர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய முன்மாதிரி முயற்சிகளால் கடந்த மூன்று மாதங்களில் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் பிரசவ விகிதம் 66 சதவீதம் கூடுதலாக உயர்வடைந்துள்ளது.






தோவாளை வட்டாரத்தில் பூதப்பாண்டி அரசு மருத்துவமனை மகப்பேறு மருத்துவத்தில் மக்களுக்கு பயனுள்ள விதத்தில் மேன்மையடைந்துள்ளதால் இவ்வட்டாரத்திலுள்ள பெண்கள் குறிப்பாக பழங்குடியின பெண்கள் தங்களின் கர்ப்ப காலத்தில் வெகுதூரம் பயணிப்பதைத் தவிர்த்து இம்மருத்துவமனையிலேயே பயனடைந்து வருகின்றனர்.

இம்முன்மாதிரியான வளர்ச்சிப் பணிகள் வெற்றிகரமாக அரசு பூதப்பாண்டி மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய முயற்சிகள் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையின் மகப்பேறு பிரிவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவற்றை அரசு மருத்துவமனை பத்மநாபபுரம் மற்றும் குழித்துறையில் செயல்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. கடந்த 01.08.2025 அன்று மாநில திட்டக்குழு ஆணையத்தால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் அரசு மருத்துவனை பூதப்பாண்டியில் வளமிகு வட்டார வளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு சிறந்த நடைமுறைக்கான விருது வழங்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



■ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திருமதி ஹேமலதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தேனூர் கிராமத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் "அன்பு இல்லங்கள்" வீடுகளின் கட்டிட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட அலுவலா் திரு.வானதி அவர்கள் உடன் உள்ளார்.

# மதுரை மாவட்டத்தில் குறுவை பருவநெற்பயிர் காப்பீடு ஆகஸ்ட்14 வரை நீட்டிப்பு

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

மதுரை, ஆக.06

மதுரை மாவட்டத்தில் 20252026ம் ஆண்டிற்கு காரீப் பருவத்தில் (குறுவை) நெற் பயிருக்கு காப்பீடு செய்ய 31.07.2025ம் தேதி கடைசி நாளாக இருந்த நிலையில் தற்போது 14.08.2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஈடு செய்து வாழ்வாதாரத்தை மீட்கும் வகையில் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடுத்திட்டத்தின் கீழ் நெல் பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய வரும் ஆகஸ்ட்14 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அறிவிக்கை செய்யப்பபட்ட கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். இதற்கு பூர்த்தி செய்யப்பட்ட கையொப்பமிட்ட முன்மொழிவு விண்ணப்பம், நடப்பு பருவ அடங்கல், சிட்டா, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் மற்றும் ஆதார் அட்டை ஆகிய ஆவணங்களை கொண்டு விவசாயிகள் பதிவு செய்யலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைய நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ720/ பிரிமியம் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், நெல் பயிருக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்பீடாக ரூ.36000/ ஏக்கருக்கு விவசாயிகளுக்கு கிடைக்கும்.

பதிவு செய்யும் போது விவசாயின் பெயர் மற்றும் விலாசம், நிலப்பரப்பு, சர்வே எண் மற்றும் உட்பிரிவு, பயிரிட்டுள்ள நிலம் இருக்கும் கிராமம் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களை சரியாக கவனித்து பதிவு செய்து கொள்ளவும். மேலும், விபரங்களுக்கு தங்கள் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

# சேலம் தலேமா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைத் திறந்து 600 தொழிலாளர்களுக்கும் மீண்டும் பணி வழங்கவும்: அன்புமணி

சென்னை: ஆக.6-




சேலம் தலேமா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைத் திறந்து, 600 தொழிலாளர்களுக்கும் மீண்டும் பணி வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சேலம் மாநகரம் சூரமங்கலத்தில் சுமார் 50 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த தலேமா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் கடந்த சில நாள்களுக்கு மின் கதவடைப்பு செய்துள்ளது. அதுமட்டுமின்றி, பணியாளர்கள் அனைவரும் தானாக பணி விலகும் சூழலை ஏற்படுத்தி நிறுவனத்தை நிரந்தரமாக மூட அதன் நிர்வாகம் திட்டமிட்டிருக்கிறது. தலேமா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் இந்தத் தொழிலாளர் விரோதப் போக்கு கடுமையாக கண்டிக்கத்தக்கது.

சூரமங்கலத்தில் 1975ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தலேமா நிறுவனம் பின்னர் ஸ்வீடனை தலைமையிடமாகக் கொண்ட காமிக் குழுமத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு ஆசிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் தலேமா நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தொடர்ச்சியாக லாபம் ஈட்டி வந்த நிறுவனத்தை மூடுவதற்காக நஷ்டக் கணக்குக் காட்டப்படுவதாக தொழிலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இந்த அநீதியை அனுமதிக்கக் கூடாது.

தலேமா நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்காகவே அதன் நிர்வாகம் சிறப்பு அதிகாரி ஒருவரை நியமித்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக அங்கு பணியாற்றும் 300 பெண்கள் உள்ளிட்ட 600 பணியாளர்களையும் பணியிலிருந்து தானாக விலகிக் கொள்ளும்படி அதன் பொதுமேலாளர் வலியுறுத்தி வருகிறார். ஆனால், அதற்கு தொழிலாளர்கள் ஒப்புக்கொள்ளாத நிலையில் , தலேமா நிறுவனம் தானாக முன்வந்து கதவடைப்பு செய்திருக்கிறது.

தலேமா நிறுவனம் கதவடைப்பு செய்யக்கூடாது என்று தொழிலாளர் நலத்துறை அறிவுறுத்தியும் அதையும் மீறி தலேமா நிறுவனம் கதவடைப்பு செய்திருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க வேண்டிய தமிழக அரசு, அதன் கடமையை மறந்து தலேமா நிறுவனத்தின் தொழிலாளர் விரோத செயல்களுக்கு துணை போய்க்கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை தமிழக அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் அரசுத் துறை மூலம் 5.5 லட்சம் பேருக்கும், தனியார் நிறுவனங்கள் மூலம் 50 லட்சம் பேருக்கும் வேலை வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த திமுக, அதில் 10 விழுக்காட்டைக் கூட நிறைவேற்றவில்லை. புதிய வேலைவாய்ப்புகளை உருவாகும் திறனற்ற திமுக அரசு, இருக்கும் வேலைவாய்ப்புகளையாவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலேமா நிறுவனத்தின் உயரதிகாரிகளை தமிழக அரசு அழைத்துப் பேசி, ஆலை எதிர்கொண்டு வரும் சிக்கல்களுக்கு தீர்வு கண்டு, அதை தொடர்ந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு பணியாற்றும் 600 தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து பணி வழங்கப்படுவதையும், அவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் : மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, ஆக.6-



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 386 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த நபர் சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்ட தனியார் கல்குவாரியில் கடந்த 20.5.2025 அன்று ஏற்பட்ட விபத்தில் இறந்தமைக்காக, இறந்த நபரின் குடும்பத்தினருக்கு ரூ.3,00,000/ மதிப்பீட்டில் முதலமைச்சர் பொது நிவாராண நிதிக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துகழுவன் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பலமான கூட்டணியை அமைக்க முடியாமல் தடுமாறுகிறதா அதிமுக?

சென்னை, ஆக.6-



ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்துள்ள திமுக, தனது கூட்டணியையும் கட்டுக்கோப்பாக வைத்து 2026 தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தற்போது வரை பலமான கூட்டணியை அமைக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே இருக்கும் நிலையில், தமிழகத்தில் அரசியல் கணக்குகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது. திமுக தனது கூட்டணியை தொடர்ந்து பலப்படுத்திக் கொண்டே வருகிறது. தொகுதி பங்கீடு தொடர்பாக அவ்வப்போது சில பிணக்குகள் ஏற்பட்டாலும், ஏதோ ஒரு வழியில் கூட்டணி கட்சிகளை சரிகட்சி வைத்திருக்கிறது திமுக. அதுமட்டுமின்றி பாமக, தேமுதிக, ஓபிஎஸ் என புதியவர்களை கூட்டணிக்குள் கொண்டுவரவும் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டுள்ளது.

ஆனால், திமுகவை ஆட்சியை விட்டு அகற்றவேண்டும் என்ற இலக்கோடு களமிறங்கியிருக்கும் அதிமுகவால் இப்போதுவரை பலமான கூட்டணியை உருவாக்க முடியவில்லை. இதுகுறித்து பதில் சொன்ன எடப்பாடி பழனிசாமி, "எங்கள் கூட்டணியில் பாஜக இருக்கிறது. பாஜகவோடு பல கட்சிகள் கூட்ட்ணியில் இருக்கிறது" என்று அசரடித்தார். அவர் சொன்னது உண்மைதான். அதிமுக கூட்டணியில் இப்போது பாஜகவை தவிர யாரும் இல்லை. பாஜக கூட்டணியில்தான் தமாகா, அமமுக, ஐஜேகே, ஏசி சண்முகம் கட்சி போன்றவை உள்ளன. அவற்றில் அமமுக போன்ற சில கட்சிகள் அதிமுக பாஜக அணியில் தொடர்வதில் ஊசலாட்டத்தில் உள்ளன.

பலமான கூட்டணியை உருவாக்க இபிஎஸ் எடுக்கும் முயற்சி என்ன?

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை உருவாக்க வேண்டுமானால் பலமான கூட்டணியை அமைப்பது முக்கியமானது. ஏனென்றால் எம்ஜிஆர், கருணாநிதி, ஜெயலலிதா போன்ற ஜனரஞ்சக தலைவர்களும்கூட பலமான கூட்டணியை கட்டமைத்தே ஆட்சி மாற்றம் கண்டார்கள். தமிழகத்தில் எம்ஜிஆரின் மறைவுக்குப் பின்னர் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. விதிவிலக்காக 2011 மற்றும் 2016ல் ஜெயலலிதா தொடர்ந்து ஆட்சியை பிடித்து சாதித்து காட்டினார்.

ஜெயலலிதா பாணியில் தொடர்ந்து 2ஆம் முறையாக 2026ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் வெற்றிபெற திட்டம் தீட்டி வருகிறார் முதல்வர் ஸ்டாலின். ஆனால், எப்படியாவது ஆட்சி மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியில் இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அதனால்தான் திமுகவை எதிர்ப்பவர்கள் எல்லாம் எங்கள் கூட்டணிக்கு வாருங்கள் என அழைப்பு விடுத்து வருகிறார்.

தவெக, நாம் தமிழர் போன்ற கட்சிகளுக்கு இபிஎஸ் விடுத்த அழைப்பை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. ஏற்கெனவே அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்த பாமக, தேமுதிக போன்ற கட்சிகள் கூட இதுவரை எந்த முடிவையும் சொல்லவில்லை. குடும்ப சண்டையில் சிக்கித் தவிக்கும் பாமக இப்போது கூட்டணி குறித்து முடிவெடுப்பது சிரமம்தான். அதேபோல தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவும் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துவிட்டார். இவர்களெல்லாம் தேர்தல் நெருக்கத்தில்தான் கூட்டணி குறித்து முடிவு சொல்வார்கள்.

புதிய கூட்டணியை அமைப்பது அடுத்த விவகாரம் என்றாலும், இருக்கும் கூட்டணியை அதிமுக பாஜக தக்கவைக்குமா என்பதே கேள்விக்குறியாகி இருக்கிறது. ஏனென்றால் பாஜகவில் பசை போட்டு ஒட்டிக்கொண்டிருந்த பன்னீர்செல்வமே கோபப்பட்டு கூட்டணியை விட்டு வெளியேறி விட்டார். இதே நிலை நீடித்தால் அமமுகவும் கூட்டணியை விட்டு விலகும் சூழல் உருவாகும்.

இருமுனைப் போட்டி என்ற நிலையும் இப்போது இல்லை. தமிழகம் 2026 தேர்தலில் திமுக+, அதிமுக+, தவெக+, நாதக என நான்கு முனைப் போட்டியை காணவிருக்கிறது. எனவே, அதிமுகவில் சேர விருப்பமில்லாத அரசியல் கட்சிகளுக்கு தவெக எனும் புதிய ஆப்சனும் தயாராக இருக்கிறது.

இன்னொரு பக்கம், அதிமுகவை பலவீனப்படுத்த அக்கூட்டணியில் இருக்கும் கட்சிகளை தவெக பக்கம் தள்ளவும், தனித்துப் போட்டியிட வைக்கவும் சகல விதங்களிலும் திமுக முயற்சி எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதற்காக ஒரு பெரிய டீமே களமிறங்கியுள்ளது.

'2026ல் நிச்சயம் வெற்றி என்ற மனநிலைக்கே திமுக வந்துவிட்டது. ஆனால் தனது சுற்றுப்பயணத்துக்கு வந்த கூட்டத்தை பார்த்து, அதீத தன்னம்பிக்கைக்கு இபிஎஸ் சென்றுவிட்டாரோ என்று தோன்றுகிறது. அசைந்து கொடுக்காத நபரான ஜெயலலிதா கூட தன்னை கடுமையான விமர்சித்த கட்சிகளையும், நபர்களையும் கூட்டணிக்கு கொண்டுவந்து பலமுறை வெற்றி பெற்றுள்ளார். தேர்தல் வெற்றி வேண்டுமானால் கூட்டணியில் ஒவ்வொருவரும் முக்கியம். அதனை உணராத காரணத்தால்தான் வலுவான கூட்டணி அமைக்க முடியாமல் அதிமுக தடுமாறுகிறது' என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

'தேர்தலுக்கு இன்னும் 8 மாதம் இருக்கிறது. அதற்குள் பல்வேறு மாற்றங்கள் நடக்கும், வலுவான கூட்டணி அமைப்போம்' என தொடர்ந்து சொல்லி வருகிறார் இபிஎஸ். அவரது வார்த்தை பலிக்குமா எனப் பார்ப்போம்.

# அனலைக் கிளப்பும் 'அனாதைமடம்' டைடல் பார்க்! எந்தப் பக்கம் நிற்பது என்று தெரியாமல் தகிக்கும் திமுக மேயர்

நாகர்கோவில், ஆக.6-



நாகர்கோவிலில் டைடல் பார்க் அமைக்கப்படும் என்பது கடந்த தேர்தலில் திமுக அளித்தவாக்குறுதி. இத்தனை நாள் விட்டுவிட்டு இப்போது அதை நிறைவேற்ற கிளம்பி இருக்கிறது ஆளும் கட்சி. அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை... ஆனால், அதற்காக தேர்வு செய்திருக்கும் இடத்தை வைத்துத்தான் இப்போது சர்ச்சை.

நாகர்கோவிலின் மையப்பகுதியில் உள்ளது அனாதைமடம் மைதானம். திருவிதாங்கூர் மன்னர் காலத்தில் 'அவிட்டம் திருநாள் மைதானம்' என்றிருந்த இது அனாதைகள் தங்குவதற்காகவும், இளைப்பாறுவதற்காகவும் மன்னர்களால் வழங்கப்பட்டது. சுமார் 7 ஏக்கர் பரப்பளவிலான இந்த மைதானம் தற்போது மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. பொதுக்கூட்டங்கள், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் நடத்த வாடகைக்கு விடுவதன் மூலம் இந்த மைதானத்தால் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.80 ஆயிரம் வரைக்கும் வருமானம் ஈட்டி வருகிறது மாநகராட்சி.

இந்த நிலையில், தேர்தல் வாக்குறுதிப்படி நாகர்கோவிலில் சுமார் ரூ.600 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க் அமைக்க ஆயத்தமாகி வருகிறது திமுக அரசு. அதற்கான இடமாக அனாதைமடத்தை குமரி மாவட்ட ஆட்சியர் அழகுமீனா அடையாளம் காட்டி இருப்பது தான் இப்போது புயலைக் கிளப்பி இருக்கிறது. அண்மையில் கூடிய நாகர்கோவில் மாமன்றக் கூட்டத்தில் திமுக உள்ளிட்ட ஒட்டுமொத்தமாக 52 கவுன்சிலர்களும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மாநகராட்சியின் அனுமதி பெறாமல் தன்னிச்சையாக இப்படியொரு முடிவை எடுத்த ஆட்சியருக்கு எதிராக கூட்டத்தில் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நாகர்கோவிலில் டைடல் பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், அனாதைமடத்துக்குப் பதிலாக மாற்று இடத்தில் டைடல் பார்க்கை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையில், டைடல் பார்க் அமையும் இடத்தை பார்வையிடுவதற்காக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அண்மையில் அனாதைமடம் வந்தார். அவரிடம் வடக்கு தாமரைக்குளம் உப்பளம் பகுதி உள்ளிட்ட சில இடங்களை டைடல் பார்க்கிற்காக மேயர் மகேஷ் பரிந்துரைத்தார். ஆனால், அனாதைமடம் நகரின் மையப்பகுதியில் இருப்பதுடன், திருவனந்தபுரம் விமான நிலையம், திருநெல்வேலி வழித்தடம் உள்ளிட்ட போக்குவரத்து அம்சங்களும் இருப்பதால் இந்த இடம் தான் சரியாக இருக்கும் என வரைபடம் சகிதம் அமைச்சருக்கு விளக்கினார் ஆட்சியர் அழகுமீனா. அதை ஏற்றுக்கொண்டு அனாதைமடத்திலேயே டைடல் பார்க் அமைக்க டிக் செய்தார் அமைச்சர்.

மாமன்றத்தின் சிறப்புத் தீர்மானத்தையும் பொருட்படுத்தாமல் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு எதிராக 52 மாமன்ற உறுப்பினர்களும் இப்போது ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள். அவர்கள், "அடுத்த மாமன்றக் கூட்டத்தில் இது தொடர்பாக புயலைக் கிளப்புவோம். எங்களோடு சேர்ந்து சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றிய திமுக மேயர் மகேஷ் இப்போது ஏனோ மவுனம் காக்கிறார். ஆனால், டைடல் பார்க் இடத்தை மாற்றாவிட்டால் மக்களைத் திரட்டி நாகர்கோவிலை ஸ்தம்பிக்க வைப்போம்" என்கிறார்கள்.

இதுகுறித்து மேயர் மகேஷிடம் பேசினோம். "2009ல் வருவாய்த் துறை கையகப்படுத்த நினைத்த அனாதைமடமானது பெரும் போராட்டத்திற்கு பிறகு மாநகராட்சி (அப்போது நகராட்சி) வசமாக்கப்பட்டது. நாகர்கோவிலில் டைடல் பார்க் வருவதை யாரும் எதிர்க்கவில்லை. அனாதைமடத்தில் அதை அமைப்பதைத் தான் எதிர்க்கிறார்கள். மாற்று இடத்தை தேர்வு செய்யும்படி மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் போட்ட பின்னரும் அனாதைமடமே தேர்வாகியுள்ளது. இந்த விஷயத்தில், ஒரு மேயர் என்ற முறையில் முதல்வரும் அரசும் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படும் நிலையில் தான் நான் இருக்கிறேன்" என்றார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161